இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
வெளிவாரிப் பட்டப்படிப்புகள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையம் (CEDPL)

## கலைமாணி (பொது) வெளிவாரிப் பட்டப்படிப்புக்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளல் - 2020 / 2021

**தென்கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையத்தினால் கலைமாணி (பொது) வெளிவாரிப் பட்டப்படிப்புக்கு மாணவர்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் 21.03.2023 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.**

**தேவைப்படும் தகைமைகள்** : க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் அங்கீகரிக்கப்பட்ட மூன்று பாடங்களில் (2020 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முந்திய பரீட்சை) ஆகக்குறைந்த சித்திகளுடன் பொதுச் சாதாரணப் பரீட்சையில் (General Common Test) குறைந்தபட்சம் 30% புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் க.பொ.த. (சா/த) பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட ஆறு பாடங்களில் இரண்டு அமர்வுக்கு மேற்படாத வகையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**கட்டணம்** : **ரூபா. 120,000.00**

**மொழி மூலம்** : கற்கைநெறியின் முதலாம் வருடம் தமிழ் மொழியிலும் இரண்டாம் மற்றும் மூன்றாம் வருடங்கள் தமிழ் ஆங்கில மொழிகளிலும் நடைபெறும்.

**தெரிவு செய்யப்படும் முறை** : நேர்முகப்பரீட்சை மற்றும் நுழைவுப்பரீட்சை

**விண்ணப்ப முடிவுத் திகதி** : **21.03.2023**

### விண்ணப்பிக்கும் முறை

விண்ணப்பத்தினை செயற்படுத்துவதற்கான கட்டணமாக **ரூபா. 1500.00** ஐ செலுத்த வேண்டும். இக்கட்டணத்தினை, பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற பற்றுச் சீட்டினை (Paying-In-Voucher - PIV) பூரணப்படுத்தி எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் செலுத்த முடியும். மேலும் விண்ணப்பதாரிகள் பல்கலைக்கழக இணையத்தளத்திலுள்ள நிகழ்நிலை(online) விண்ணப்பப்படிவத்தை (https://forms.gle/unWPxv1jNGQpsLH67) பூர்த்தி செய்து அனுப்புவதோடு அதன் பதிவிறக்கம் செய்யப்பட்ட அச்சுப்பிரதியை அறிவுறுத்தல்களுக்கு அமைய முறைப்படி ஒப்பமிட்டு **பிரதி பதிவாளர், வெளிவாரி பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையம், இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில்** என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **“கலைமாணி (பொது) வெளிவாரிப் பட்டப்படிப்பு - 2020 / 2021”** எனக்குறிப்பிட வேண்டும். பூரணப்படுத்தப்படாத அல்லது தாமதமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

---

**மேலதிக தகவல்கள் மற்றும் நிகழ்நிலை விண்ணப்ப படிவத்தினை பல்கலைக்கழக இணையத்தளமான https://www.seu.ac.lk/cedpl/ ல் பெற்றுக்கொள்ளமுடியும்.**

---

பதிவாளர்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
ஒலுவில்
21.02.2023